2025-ம் ஆண்டு வாக்குத்தத்தம்

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. யோசுவா 1:5

# பரிசுத்த பர்வதம்

## செய்தி மலர்

மே மாத இதழ்



## உன் கோல் துளிர்க்கும்.

எண்ணாகமம் 17:5

## Your rod will Blossom.

Numbers 17:5

Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்

Pr. S. காலேப் ராபர்ட் M.Div.,

| HMSM | XXVII | MAY |

# சபையின் இலக்குகள் – 2025

1. மொத்த விசுவாசிகளின் எண்ணிக்கை 5000
2. மொத்த பராமரிப்புக்குழுக்களின் எண்ணிக்கை 300
3. மொத்தம் 50 மிஷனெரிகளை வட இந்தியாவில் தாங்குதல்
4. மிஷனெரிகளுக்கு மாதம் ரு.3,00,000/- (3 லட்சம்) அனுப்புதல்
5. சபைக்கு 2 ஏக்கர் நிலம் வாங்குதல் (Revival Centre)
6. கிளை சபை 2 ஆரம்பித்தல்
7. சபைக்கு 2 வேன் வாங்குதல் (ரு 20 பெட்டி)
8. வட இந்தியாவில் 2 ஆலயங்கள் கட்டுதல்
9. முழங்கால் ஜெப யுத்த வீரர்கள் 500 பேரை எழுப்புதல்
10. ஞானஸ்நானம் 200 நபர்களுக்கு
11. முழு நேர ஊழியர்கள் 2, மிஷனெரிகள் 2 எழுப்புதல்
12. புதுக்கோட்டையும் அதை சுற்றியுள்ள 65 கிராமங்களிலிருந்து ஜனங்கள் ஆராதனைக்கு வர
13. மீனாட்சிபட்டியில் ஆலயம் கட்டுதல்
14. புதுக்கோட்டையும் அதை சுற்றியுள்ள 65 கிராமங்களில் ஜெப யுத்தம் 2 முறை செய்தல்
15. தலைவர்களுக்கான ஊழிய பயிற்சி 2 நடத்துதல்
16. அதிகாலை ஆராதனைக்கு சபையில் 250, Online இல் 1000 நபர்களை கூட்டி சேர்த்தல்
17. சபையிலிருந்து வட இந்தியாவுக்கு மிஷன் பிரயாணம் செய்தல் (குழுவாக)
18. சபையின் கல்லறைத் தோட்டத்தை விரிவாக்கம் செய்தல்
19. V.B.S சிறப்பாக 150 இடங்களில் நடத்துதல்
20. சிறுவர் முகாம் 1
21. வாலிபர் முகாம் 1
22. பெண்கள் முகாம் 1
23. புருஷர்கள் முகாம் 1
24. மாதந்தோறும் நடைபெற்று வருகிற அமாவாசை ஜெபத்தில் 120 பேர் கூடுதல்

# நமது சபையின் ஊழியங்கள் 15 வகை

1. கிராம ஊழியம்
2. பத்திரிக்கை ஊழியம்
3. மிஷனெரி ஊழியம்
4. T.V ஊழியம்
5. மருத்துவமனை ஊழியம்
6. ஜெப நடை ஊழியம்
7. சிறுவர்கள் ஊழியம்
8. பின்தொடர் ஊழியம்
9. நேசக்கரங்கள் ஊழியம்
10. ஜெப யுத்த ஊழியம்
11. மாணவர்கள் மத்தியில் ஊழியம்
12. பராமரிப்புக்குழு ஊழியம்
13. ஆலோசனை ஊழியம்
14. மீடியா ஊழியம்
15. C.O.C ஊழியம்.

இந்த மாத வாக்குத்தத்தம்

# உன் கோல் துளிர்க்கும்.

எண்ணாகமம் 17:5

ஆசிரியரிடமிருந்து...

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்...

இந்த செய்திமலர் முலமாக உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாதம் தேவன் உங்களை துளிர்க்க செய்வார். ஆரோனுடைய கோல் துளிர்த்து, பூ பூத்து, காய்த்து, வாதுமை பழங்களை கொடுத்தது போல, உங்களையும் தேவன் அற்புதமாய் துளிர்க்க பண்ணுவார். உங்களுக்கு விரோதமாய் காணப்படுகிற முறுமுறுப்பை தேவன் ஒழியப்பண்ணுவார்.

நீங்கள் இருக்கும் உங்கள் குடும்பத்தில் சமுதாயத்தில் உங்களை தேவன் அங்கீகரித்து வித்தியாசப்படுத்துவார். உங்களுக்காக உங்கள் குடும்பத்திற்காக ஜெபித்துக் கொள்கிறோம். எனக்காகவும் குடும்பத்திற்காகவும் சபைக்காகவும் சபையின் விசுவாச குடும்பத்திற்காகவும் சபையின் முலமாக நடைபெறுகிற எல்லா வகை ஊழியத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.



**கர்த்தர் தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசிர்வதிப்பார்.**

Rev. Dr. J. Samuel Jebaraj



**ஆண்கள் பகுதி**

# கர்த்தருக்கு பிரியமான வழியில் பணத்தை சம்பாதிப்பது எப்படி?

நீ எறும்பினிடத்தில், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள்.(நீதி 6:6) கோடைக்காலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக்காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்து வைக்கும் (நீதி 6:8) என்று வேதம் கூறுவதைப் போல எறும்பைப்போல ஞானமாய் கர்த்தருக்குப் பிரியமான வழியில் சம்பாதிப்பது எப்படி என்பதை இப்பகுதியில் காண்போம்.

நாம், உயிர்வாழ உணவிற்காக, அடிப்படை தேவைகள் சந்திக்கப்பட, குடும்பத்தின் பிற தேவைகள் சந்திக்கப்பட, பிள்ளைகளின் எதிர்காலத் தேவைகள் சந்திக்கப்பட கைத்தொழில் மூலமாக, வியாபாரம் செய்து, உத்தியோகம் செய்து, பகுதி நேர வேலை செய்து மற்றும் வாடகை மூலமாக பணத்தைச் சம்பாதிக்கிறோம். வியாபாரத்தில் நியாயமான இலாபத்தைப் பெறுவது தவறல்ல. ஆனால் அநியாயமான இலாபத்தைப் பெறுதல் ஆசிர்வாதமல்ல. அநியாயமாய் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறவன் முட்டையிட்டு அவயங்காத்தும், குஞ்சுபொரிக்காமற்போகிற கவுதாரிக்குச் சமானமாய் இருக்கிறான்; அவன் தன் பாதி வயதிலே அதைவிட்டு தன் முடிவிலே மூடனாயிருப்பான் (எரே 17:1). பிறருக்கு சொந்தமானதை அதற்குரிய கிரயத்தைக் கொடுக்காமல் ஏமாற்றியோ, அல்லது பலாத்காரமாக பறித்தோ நமக்கு சொந்தமாக்கிக் கொள்வதே திருடுவதாகும். கள்ளத்தராசு, கள்ளப்படிகளைப் பயன்படுத்தி பிறருடைய இழப்பில் நாம் இலாபம் அடைய நினைப்பதே ஏமாற்றி சம்பாதித்தலாகும். மனசாட்சிக்கு விரோதமாய் சட்டவிரோதமான முறையில் பணம் சம்பாதிப்பதும், குறைவான முதலீட்டில் மிதமிஞ்சிய இலாபத்தை குறுகிய காலத்தில் எதிர்பார்ப்பதும் சூதாட்டமாகும். அநியாயத்தின் திரவியங்கள் ஒன்றுக்கும் உதவாது;

**நீதியோ மரணத்துக்குத் தப்பிவிக்கும் (நீதி 10:2).அநியாய வட்டிக்கு விட்டு, குறுக்கு வழியிலோ அல்லது சூதாடியோ, பிறரை ஏமாற்றி அநியாய இலாபத்தில் சம்பாதிக்க கூடாது.**
**எறும்பைப்போல கோடைக்காலமாகிய இளம்வயதிலே உழைத்து சம்பாதியுங்கள். அதே வேளையில் எவ்வளவு உயரமாய் வளர விரும்புகிறீர்களோ அவ்வளவு நாட்கள் எடுக்கும் என்பதை மறந்துவிடாதீர்கள். எனவே பனையைப்போல படிப்படியாக அதேவேளையில் உறுதியாக வளருங்கள் (சங் 92:12)**

## புருஷர் ஐக்கிய கூட்டம்

திங்கட்கிழமை தோறும்
இரவு 8.00 -8.45 மணி வரை

**இணைந்து ஜெபிக்க யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்..**

# யாவருக்கும் தெரிய வந்திருக்கிறது

Mrs. பெர்சியாள் ஜெபராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் பெண்களாகிய உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். சுகமாயிருக்கிறீர்களா! கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டு, அவருடைய பிள்ளைகளாய் அவருடைய அன்பிலே, கிருபையிலே பெருகிக் கொண்டிருக்கிற உங்களை கர்த்தர் இன்னும் ஆசீர்வதித்துப் பெருகப் பண்ணுவாராக. கர்த்தரைத் தேடுகிற உங்கள் வாழ்வில், குடும்பத்திலுள்ள குறைகள் எல்லாம் கர்த்தர் நிறைவாக்குவார். ஒன்றும் குறைவுபடாது. இன்று நம்மிடத்திலுள்ள விசுவாசம் கீழ்படிதல், அன்பு யாவருக்கும் தெரிய வந்திருக்கிறது. அது குறித்து சற்று விரிவாக பார்ப்போம்.

**1) விசுவாசம்:**

இயேசுவை அறியுமுன் எத்தனையோ நம்பிக்கைகள், கருத்துக்கள் நம்மிடத்தில் இருந்தது உண்டு. ஆனால் இயேசு தான் தெய்வம், அவரையல்லாமல் இரட்சிப்பு இல்லை என அறிந்து, இயேசுவின் மேல் நாம் வைத்திருக்கிற விசுவாசம், நம்பிக்கை வீண் போகாது.விசுவாசித்தவளே! பாக்கியவதி கர்த்தரால் உனக்கு சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்று மரியாளுக்கு சொல்லப்பட்ட அதே வார்த்தை தான் உங்களுக்கும். கர்த்தரின் மேலும் வார்த்தையின் மேலும் வாக்குதத்தங்கள் மேலும் வல்லமையின் மேலும் நீங்கள் வைத்துள்ள விசுவாசத்தில் உறுதியாயிருங்கள். இது யாவருக்கும் தெரிய வரும்படி மேன்மை உண்டாகும்.

**2) கீழ்படிதல்:**

ஆவிக்குறிய வாழ்வில் வளரவளர தேவனுடைய சித்தம், வார்த்தைக்கு கீழ்படிகிற இருதயத்தை ஆண்டவர் தருவார். ஆபிரகாமின் கீழ்ப்படிதல், அவனை சுதந்திரவானாய் மாற்றிற்றே. ஈசாக்கின் கீழ்படிதல் நூறு மடங்கு ஆசீர்வாதத்தைக் கொடுத்ததே. இன்று அவருடைய சத்தத்திற்கு உண்மையாய் கீழ்படிவீர்களானால், நிச்சயம் உங்கள் கீழ்படிதல் யாவருக்கும் தெரிய வரும்படி ஆசீர்வாதத்தை சுதந்தரிப்பீர்கள்.

**3) அன்பு:**

கிறிஸ்துவுக்குள் உருவாக உருவாக அவருடைய திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாக மாறுவோம். இயேசுவின் சுபாவத்தில் பிரதானமானது அன்பே. நம் மேல் வைத்த அன்பு பெரியது. அன்பினால் தான் இரட்சிப்பு, கிருபை, தயவு, மேன்மை என நாம் பெற்று வருகிற ஆசீர்வாதங்கள் அதிகம். அன்பு சகலத்தையும் தாங்கும். சகலத்தையும் தாங்குகிற நீங்கள் இயேசுவை வெளிப்படுத்துவது தெரிய வந்திருக்கிறது.

பெண்கள் ஆராதனை

செவ்வாய் தோறும் காலை 10:00 -11:30 மணி வரை நமது சபையில் வைத்து நடைபெறுகிறது.

LIVE STREAMING



# ஆவியில் ஒழுக்கம்

பொறுப்பு: Pr. காலேப் ராபர்ட்
உதவி: Bro. பிலிப்

அன்பான தம்பி தங்கைகளுக்கு இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். ஒழுக்கத்தைக் குறித்து நாம் பார்த்து கொண்டு வருகிறோம். மனிதனை ஆவி, ஆத்துமா, சரீரம் என்று மூன்று பரிமாணங்களை கொண்டு, தேவன் படைத்துள்ளார். இதில் மிக மிக முக்கியம் ஆவி தான்.

மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது.அது உள்ளத்திலுள்ளவைகளை எல்லாம் ஆராய்ந்து பார்க்கும்.(நீதி 20:27) உள்ளம் என்பது நம் ஆத்துமாவில் ஒரு பங்கு என்று நாம் அறிவோம். அவ்வுள்ளத்தை ஆராயும் ஆவி என்றால், அது எத்தனை மேன்மையுள்ளதாக இருக்க வேண்டும்! அந்த ஆவியை நாம் எவ்வளவு சுவர்மையாக வைத்திருக்க வேண்டும்! ஆவியின் கனியோ (கலா 5:22,23) என்றே நாம் வேதத்தில் வாசிக்கிறோம். ஆவியானவரின் துணை கொண்டு நம் எண்ணங்கள், செய்கைகளை ஒவ்வொரு தினமும் நாம் சுயபரிசோதனை செய்ய வேண்டும். யோவான் 4 ம் அதிகாரத்தில், சமாரிய பெண்ணிடம் இயேசு ஜீவத்தண்ணீரைக் குறித்து பேசும்பொழுது, அவள் சரீர தேவையும், ஆத்தும தேவையான தாகம் என்ற உணர்வைத் தீர்க்கும் தண்ணீரையே எதிர்பார்த்தாள். ஆவியில் வெளிப்பாடு இல்லாததால் இயேசு சொன்ன ஜீவத்தண்ணீர் அவளுக்கு புலப்படவில்லை.

நம்ம Friend ஒருத்தர், தேவன் தெரிந்துக்கொண்ட ஆள்தான், பேரு சிம்சோன் இரட்சிக்கப்படாத ஒரு நபரோடு நேரம் செலவு செய்கிறான். 2,3 முறை அவளின் சூழ்ச்சிக்கு தப்பிக்க தேவன் சகாயம் செய்கிறார். அப்போதாவது, அறிவு வரணும் இல்லையா? தொடர்ந்து பண்றான், பேசுறான். நியாயதி 15,16ம் வசனம் மாதிரி நல்லதொரு emotional *drama* செய்கிறாள் அவள். இப்படி உங்கள் வாழ்க்கையிலும் யாராவது (அது Friend, அக்கா மாதிரி, அண்ணன் மாதிரி'னு யாரா வேணாலும் இருக்கலாம்) சோகக்கதைகள், அழுதல், என் மேல "உண்மையிலே" பாசம் இருந்தால் என்று ஆரம்பித்தால், தயவு செய்து 'ஐயோ, அம்மா, என்ன விட்டுருமா' னு வண்டியை கிளப்பினால் பிழைப்பீர்கள். இல்ல, அவங்க கஷ்டப்படுவாங்களே, அன்பே பிரதானம்'னு பாடிட்டு இருந்தீங்கனா, சீக்கிரம், நியாயதி 19ம் வசனம் போல, அடி . பின்பு, தேவ ஆவி நம்மை விட்டு விலகிவிடுவார். அப்புறம் வாழுகிற வாழ்க்கை அஞ்சு பைசைவுக்கு பிரயோஜனம் இல்லை.ஆவியில் ஒழுக்கமாக இருக்க ஜெபம், வேத வசனம், உபவாசம் மற்றும் அந்நிய பாஷை வேண்டும். இதனோடு கூட முக்கியமான ஒன்று உண்டு – கலாத்தியர் 5;16 சொல்வது போல அனுதினமும் அபிஷேகத்தில் நிரம்பி, ஆவியின்படி நடத்தல் வேண்டும்.

GOD BLESS YOU...




# முதல் மதிப்பெண் யாருக்கு?

பொறுப்பு:
Mrs. லீலிதனராஜ்

**அன்பான சிறுபிள்ளைகள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்**



ஓர் உயர்நிலைப்பள்ளி காலாண்டு விடுமுறைக்குப்பின் தலைமையாசிரியர் ஒவ்வொரு வகுப்பிற்கும் சென்று முதல் மதிப்பெண் வாங்கியவர்கள் யார் என்று விசாரிப்பது வழக்கம். அதன்படி 8ம் வகுப்பறைக்கு சென்று ஒவ்வொரு பாடத்திலும் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களை எழுந்து நிற்கச் சொல்லி பாராட்டினார். இந்த வகுப்பிலேயே குறைந்த மதிப்பெண் பெற்றது யார்? எனக்கேட்டார். இவ்வேளையில் வெட்கத்தோடு மெல்ல எழுந்து நின்றான் இரத்தினம். அப்பள்ளியில் எல்லாரும் மக்குபையன் என்றே அவனை அழைப்பார்கள். அன்று இரவு ஏழை மாணவர்கள் தங்கும் விடுதியில், இரத்தினம் மட்டும் சாப்பிடாமல் ஒரு மரத்தின் அடியில் அமர்ந்து கொண்டு பள்ளியில் நடந்ததை எண்ணி அழுது கொண்டிருந்தான். அப்போழுது "நீ ஏன் அழுது கொண்டிருக்கிறாய்?" என்றான் ஜோசப். அதற்கு இரத்தினம் "இன்று பள்ளியில் நடந்ததை எண்ணி அழுது கொண்டிருக்கிறேன்" என்றான். அதற்கு ஜோசப் "ஆண்டவராகிய இயேசு உனக்கு உதவி செய்வார். நீ ஏன் என்னுடன் ஆலயத்துக்கு வரக்கூடாது? அங்கே உனக்காக ஜெபிப்பார்கள்." என்றான் ஜோசப். இந்த வார்த்தை இரத்தினத்திற்கு பெரிய ஆறுதலைத் தந்தது.



ஞாயிறன்று இரத்தினம் ஜோசப்புடன் ஆலயம் சென்றான். இயேசுவைப் பற்றிய வார்த்தைகள் மிகுந்த ஆறுதலைத் தந்தது. ஆராதனை முடிந்ததும் போதகரிடம் தேர்வுகளில் நல்ல மதிப்பெண் பெறுவது எவ்வாறு? என்று கேட்டான். யாக் 1:5 இல் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாய் இருந்தால் தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்கு கொடுக்கப்படும் என்று எழுதப்பட்டுள்ளது. நீ தேவனிடத்தில் கேட்டால் அவர் உனக்கு நிச்சயம் தருவார் என்று கூறினார். விடுதிக்கு சென்றதும் ஜெபிக்க ஆரம்பித்தான். அவன் ஜெபித்ததை தேவன் கேட்டார். அன்றிலிருந்து நன்றாக படிக்க ஆரம்பித்தான். மாததேர்வுகளிலும் அரையாண்டு தேர்வுகளிலும் முதல் மதிப்பெண் பெற உதவி செய்தார்.

எனதன்பு சிறுபிள்ளைகளே! மக்குபையனாக இருந்தவரை மகா புத்திசாலியாக மாற்றின தேவன் எவ்வளவு பெரியவர். நீங்களும் ஜெபியுங்கள் புத்திசாலியாக மாற்றுவார்.

சிறுவர் ஊழியப் பொறுப்பாளர்கள் & நடைபெறும் இடங்களைப் பற்றி தெரிந்திக்கொள்ள QR ஐ Scan செய்யவும்.

CHILDREN'S TIME
வாரந்தோறும் மாலை 5:00 மணி அளவில் சிறுவர் நேரம் நமது சபையின் யூ டியூப் சேனலில் ஒளிபரப்பப்படும்.

# நமது சபை தாங்கும் ராஜஸ்தான், குஜராத், டெல்லி, பஞ்சாப், அசாம் ஊழியங்கள்.

நமது சபை தாங்கும் 38 மிஷனெரிகளும், 4 மிஷன் பிள்ளைகளுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள், உற்சாகமாய் கொடுங்கள்.

**மாதம் தேவை: ரூ.1,94,100**

பொறுப்பு: Bro. அர்னால்டு



**Pr. Daniel Babu** *Gujarath* | **Pr. Stephen Rathod** *Rajasthan* | **Pr. Mandeep kidhay** *Moga* | **Pr. Chaman Masih** *Ablowal* | **Pr. Binu Vijayan** *Tripuri*



**Pr. SawarGill** *Gurdaspur* | **Pr. Peter Masig** *Taran Taram* | **Pr. Sandeep Singh** *Chunnai Kalan* | **Pr. Inderjit Singh** *Mohali* | **Pr. Prasenjit Basumatary** *Assam*



**Pr. Karthick** *Chandigarh* | **Pr. Gurdial Singh** *Dehriwal Droga* | **Pr. Rajkumar** *Kurali* | **Pr. Rajesh** *Mahatpur* | **Pr. Simson** *Karnataka*



**Pr. Happy Masih** *Sarspur* | **Pr. Jirma Lal** *Bazara* | **Pr. Caleb** *Delhi* | **Pr. Heral Kaddara** *Rajasthan* | **Pr. Arionp Kumar** *Ajimar* | **Bro.Sam Guna Seelan** *Sharing Love Mission*



**Pr. Kamal Deep** *Punjab* | **Pr. Godson Joy** *Punjab* | **Pr. Harjeet Kaur** *Nawashar* | **Pr. Jaswinder Kumar** *Delhi* | **Pr. Pritam Singh** *Rajasthan* | **Pr. Sonu** *Makhu* | **Pr. Patras Masih** *Feruyzepur*



**Pr.Dhananjay Nokman** *Assam* | **Pr. Jinod Rabha** *Assam* | **Bro. Prakash** *Shalom Charity Trust* | **Sis. Sugantha** *Shalom Charity Trust* | **Bro. Joshua Bhuriya** *Shalom Charity Trust* | **Sis. Karuna K. Damor** *Madhya Pradhesh*

**மிஷனெரி ஊழியத்திற்கு உங்களால் இயன்றதை அனுப்பி தாங்கலாம்.**

**எங்களது வங்கி கணக்கு எண்:**

| | |
|---|---|
| Name | : Assembly of God Church, Pudukottai. |
| Bank | : TMB |
| A/c No. | : 035100050313093 |
| IFSC Code | : TMBL0000035 |
| Branch | : Pudukottai, Tuticorin. |

# பராமரிப்புக் குழு

| டிவிஷன் எண் | டிவிஷன் தலைவர் | பராமரிப்புக்குழுக்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | Bro. வேதமுத்து, Sis. கவிதா | 16 |
| 02 | Bro. தனராஜ், Sis. எஸ்தர் | 18 |
| 03 | Bro. அற்புதராஜ், Bro. யாக்கோபு | 19 |
| 04 | Pr. ராஜன், Sis. கோயில் செல்வி | 24 |
| 05 | Bro. ரூபன், Sis. பேன்சி | 16 |
| 06 | Bro. சாமுவேல் பீட்டர், Bro. பால் | 14 |
| 07 | Sis. ஜெயா , Sis.அமுதா | 11 |
| 08 | Sis. மேரி செல்வி, Sis. தேன்மொழி | 15 |
| 09 | Sis. வசந்தா , Sis. காஞ்சனா | 16 |
| 10 | Sis. சாராள் ஜெயராணி, Bro. சதீஷ் | 12 |
| 11 | Sis. பொன்செல்வி, Bro. அலைக்ஸ் | 19 |
| 12 | Bro. ஜெபஞான குணசிங், Bro. இம்மானுவேல் | 13 |

**உங்கள் பகுதியில் செயல்படும் பராமரிப்புக் குழுக்கள் பற்றியும் நடைபெறும் நேரத்தை பற்றியும் தெரிந்து கொள்ள கொடுக்கப்பட்டுள்ள *QR Code* ஐ *Scan* செய்யவும்.**

# சாட்சிகள்

● கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக! நான் இஞ்சினியரிங் முதலாமாண்டு படித்துக் கொண்டிருக்கிறேன். செமஸ்டர் தேர்வில் கணித பாடத்தில் தோல்வியடைந்துவிடுவேன் என்று கலங்கி இருந்த வேளையில் அமாவாசை ஜெபத்திற்கு சென்று ஒப்புக்கொடுத்து பொருத்தனை செய்து ஜெபித்தேன். அனைத்து தேர்விலும் சிறந்த மதிப்பெண்ணுடன் தேர்ச்சி பெற தேவன் கிருபை பாராட்டினார்.

–**Bro.** இன்ஃபன்ட் கவின்

---

● எனக்கு தொண்டைவலி இருந்துது. 25 நாட்கள் உபவாச ஜெபத்தில் 16 வது நாள் பாஸ்டரிடம் சொல்லி ஜெபித்தேன். பாஸ்டர் ஜெபித்து கொடுத்த ஜெப எண்ணெயை போட்டு ஜெபித்தேன். அதன்பிறகு அந்த தொண்டைவலி இல்லை. சுகம் கொடுத்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்.ஜெபித்த பாஸ்டர் அவர்களுக்கு நன்றி...

–**Sis.** மரிய செல்வம், புதுக்கோட்டை

---

● எனக்கு 3 மாதங்கள் காலில் புண் ஆறாமல் இருந்தது உபவாச ஜெபத்தில் ஜெபித்தேன். பாஸ்டர் ஜெபம் நடத்தும் போது கர்த்தருடைய வார்த்தை கிடைத்தது. மூன்று தினங்களுக்குள் பரிபூரண விடுதலை கிடத்தது.தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.

– **Bro.** பொன்ராஜ், திரவியபுரம்

---

● கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக! எனது செயினை ஒருவரிடம் கொடுத்தேன். சுமார் 5 வருடம் செயினை கொடுக்காமல் ஏமாற்றி வந்தார். 25 நாட்கள் உபவாச ஜெபத்தில் பாஸ்டர் ஐயா வாக்குதத்தமாக சொன்னார்கள், அதன்படி உபவாச ஜெபத்தின் 17 வது நாளில் செயினை என்னிடம் கொடுத்தார்கள். தேவனுக்கு கோடான கோடி நன்றி...

– **Bro.**சின்னத்துரை , சந்தோஷ் நகர்


A.G திருமண இணைப்பு ஊழியம்

1. சனி மற்றும் ஞாயிறு தவிர மற்ற நாட்களில் காலை 10:00–12:30 மணி வரை சபை அலுவலகத்திற்கு நேரில் வரலாம்.
2. தற்போது எடுக்கப்பட்ட முழு உருவ புகைப்படம் 4 தேவை.
3. அலுவலகத்திலுள்ள விண்ணப்ப படிவத்தை நிரப்பித்தர வேண்டும்.
4. விண்ணப்பிப்பவர் இரட்சிக்கப்பட்டு, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும்.
5. பதிவு கட்டணம் ரூ.10/– மட்டும்.

மேலும் விவரங்களுக்கு எங்களது அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

செல்: 9345712349

விண்ணப்ப படிவம் QR Code ல் இணைக்கப்பட்டுள்ளது.





அமாவாசை ஜெபம்

26 மே திங்கள்

செய்வினைகள், பில்லிசூனியம், அசுத்த ஆவிகளின் போராட்டங்கள் மேற்கொள்ள ஜெபிக்க வாருங்கள்.

இடம்: கெத்சமனே பிரேயர் பார்க் (தேரி)

நேரம்: இரவு 10.00–12.30 மணி வரை

13 வயதிற்க்கு மேல் உள்ள வாலிபர்கள் மற்றும் ஆண்கள் பங்கு பெறலாம்.

வாருங்கள் ஆசீர்வதிக்கப்படுங்கள்...

பொறுப்பு: Pr. ராஜன் (உதவி ஊழியர்)

LOCATION

# குறுக்கெழுத்துப் போட்டி

Sis. சாந்தா

**மே மாதம் - 2025**
**மத்தேயு எழுதின சுவிசேஷம்**
**அதிகாரம் 1 முதல் 14 வரை**
**(வசன இருப்பிடம் எழுதவும்)**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| | | | | | 4 | |
| | 5 | | | | | |
| | | | | | 6 | |
| | 7 | 8 | | 9 | 10 | 11 |
| | | | | 12 | | |
| 13 | | | 14 | 15 | | |

**வலமிருந்து இடம்**

01) தரித்திரருக்கு எது பிரசங்கிக்கப்படுகிறது?
04) தன் தகப்பனாகிய ஏரோதின் பட்டத்துக்கு வந்து யூதேயாவில் அரசாண்டது யார்?
06) பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போன காலமுதல் கிறிஸ்து வரை எத்தனைத் தலைமுறைகள்?
12) எங்கே இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்?
14) உங்கள் கால்களில் படிந்த எதை உதறிப்போடுங்கள் என்கிறார்?

**இடமிருந்து வலம்**

02) அந்தரங்கத்தில் பார்க்கிற யார் வெளியரங்கமாய் பலனளிப்பார்?
05) அவர்கள் கடலைக் கடந்து எந்த நாட்டில் சேர்ந்தார்கள்?
08) இருதயத்தின் நிறைவினால் எது பேசும்?
13) எது தெளிவாயிருந்தால் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும்?
15) அவருடைய கீர்த்தி எங்கே பிரசித்தமாயிற்று?

**மேலிருந்து கீழ்**

03) ஈசாய் எந்த ராஜாவைப் பெற்றான்?
10)எது மரங்களின் வேர் அருகே வைக்கப்பட்டிருக்கிறது?
11) வனாந்திரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று சொன்ன தீர்க்கதரிசி யார்?

**கீழிருந்து மேல்**

07) தேவ ஆவி எதைப் போல இறங்கி தம் மேல் வருகிறதைக் கண்டார்?
09) இப்படி எல்லா எதையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார்?
11) காற்பங்கு தேசாதிபதி யார்?
13) வானபரியந்தம் உயர்த்தப்பட்டது எது?

**20ம் தேதிக்குள் தபால் மூலம் அனுப்பவும் அல்லது அலுவலகத்தில் நேரடியாக கொடுக்கவும்**

**பரிசு பெறும் 5 நபர்கள்:**

1) Sis. ஞான சில்வியா,
நந்தகோபாலபுரம்
2) Sis. ஜெபக்கனி,
மாதா நகர், பாண்டியாபுரம்
3) Sis. செல்வா,
இருவப்பபுரம்
4) Sis. ஹெலன் திலக்,
புதுக்கோட்டை
5) Sis. ஆய்சா ஜெனிபர்,
கீழ்ப்பனைகுளம்

## எங்களது வங்கி கணக்கு எண்:

**இந்த செய்தி மலர் ஊழியத்திற்க்காக ஜெபியுங்கள். இதன் தேவை சந்திக்கப்பட காணிக்கை அனுப்பலாம்,**

**Name** : J. Samuel Jebaraj
**Bank** : ICICI - Bank
**A/c No.** : 613901506045
**IFC Code** : ICIC 0006139
**Branch** : Tuticorin

*UPI ID:*
**prjsjebaraj@okaxis**

## இந்த மாதம் போதகர் செல்லும் ஊழியங்கள்:

01.05.2025– வியாழக்கிழமை
**பிராந்திய உபவாச கூடுகை - திருநெல்வேலி**

06.05.2025– செவ்வாய்க்கிழமை
**மண்டல ஊழியர் கூடுகை - திருநெல்வேலி**

12 – 17.05.2025 – திங்கள் – வெள்ளி
**மிஷன் பிரயாணம்- டெல்லி**

20.05.2025–செவ்வாய்க்கிழமை
**முழு இரவு ஜெபம் -தூத்துக்குடி**

22,23.05.2025–வியாழன் & வெள்ளி
**ஊழியர்கள் சிறப்பு முகாம்- காஞ்சிபுரம்**

23.05.2025–வெள்ளிக்கிழமை
**முழு இரவு ஜெபம் - காஞ்சிபுரம்**

26,27.05.2025–திங்கள் & செவ்வாய்
**ஊழியர்கள் ஜெப கூடுகை - மதுரை**

# ஞாயிறு தோறும் 5 ஆராதனைகள்

1 – வது ஆராதனை - காலை 06:00–07:30

2 – வது ஆராதனை - காலை 08:30–10:00

3 – வது ஆராதனை - காலை 11:00–12:30

4 – வது ஆராதனை -மாலை 05:00–06:00 ஹிந்தி

5 – வது ஆராதனை - மாலை 06.30–08:00

**உபவாச ஜெபம்**

சனிதோறும் காலை 10:00 – 12:30

**பெண்கள் ஆராதனை**

செவ்வாய்தோறும் காலை 10:00 – 11:30

**அதிகாலை ஆராதனை**

தினந்தோறும் காலை 6:00 – 6:40

**அமாவாசை ஜெபம்**

அமாவாசை இரவு 10:00 – 12:30

வேதமே வெளிச்சம் (Zoom meeting) வியாழன் தோறும் இரவு 8.00 மணிக்கு
MEETING ID: **337 022 2215**, PASSCODE: **1234**

**சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். எபி 10:25**





எங்கள் முகவரி:

Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்

பரிசுத்த பர்வதம் ஏ.ஜி சபை, சீயோன் நகர்,
புதுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் – 628 103,
தமிழ்நாடு, இந்தியா.

www.hmagchurch.in
holymountainag@gmail.com
+91 98421 71014, +91 6369097825
+91 93457 12349


ABOUT US

SCAN ME

To ..............................................................................................
..............................................................................................
..............................................................................................